# மாநிலங்களவையில் திருச்சி சிவா பேச்சு...

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் தண்ணீரை ஆயுதமயமாக்கலாலும் தண்ணீர் பற்றாக்குறை அதிகரிப்பதாலும் ஆயுதம் தாங்கிய அமைப்புகளில் ஆள்சேர்ப்பு அதிகரிப்பதாக ஓர் ஆய்வு கூறுகிறது. இருக்கும் சிறிதளவு நீரை ஆயுதம் தாங்கிய குழுக்கள் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்கின்றன. இதனாலேயே பொதுமக்களில் பலர் அந்த குழுக்களில் இணைந்து கொள்கின்றனர்?

**தீவிரவாதிகள் உருவாவார்கள்!**

நீங்கள் சிந்துநதி நீரை நிறுத்தினால் என்ன நடக்கும்? நிறைய தீவிரவாதிகள் உருவாவார்கள், உடனடியாக இந்தியாவை தாக்குவார்கள். தண்ணீரை திறக்கவில்லை என்றால் அதற்கான மாற்று சேமிப்பு வழி உங்களிடம் என்ன உள்ளது? உங்களிடம் அணைகள் உள்ளனவா, நீர்த்தேக்கங்கள் உள்ளனவா? கால்வாய்கள் உள்ளனவா? நீங்கள் அப்படி ஒன்றை கட்டினால் கூட, எல்லை பகுதிகளில் உள்ள தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அவை இரையாகக் கூடும்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே ஏதாவது விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டால், அவர்கள் நம் எல்லை பகுதியில் இதே போன்று செயல்பட்டால், அங்கு வசிக்கும் வடகிழக்கு மக்களின் நிலை என்ன? தற்போது அருணாச்சல பிரதேச மாநிலத்தில் ஓர் அணை கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. உலகிலே பெரிய அணையாக இருக்கக்கூடிய இந்த அணை கட்டுமானம் ஓராண்டுக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் யாருக்கு பாதிப்பு? வடகிழக்கில் வாழும் மக்களுக்கு பாதிப்பு. நாம் எடுக்கும் ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு இணை சக்திகொண்ட எதிர்செயல் ஒன்று உண்டு என்பதை நீங்கள் முன்னரே எண்ணவில்லையா?

நீங்கள் வெறும் தீவிரவாத தளங்களை மட்டும்தான் இலக்காக வைத்திருந்தீர்கள் என்று கூறினீர்கள். பின்னர் இராணுவ தளங்களை இலக்காக வைத்திருந்தீர்கள் என்று கூறினீர்கள். பின் விமானப் படையைப் பற்றி கூறினீர்கள். தற்போது நீங்கள் தண்ணீரை நிறுத்திவைத்துவிட்டு, தீவிர வாதத்துடன் போராடுவதற்கான ஒரு முறை என்று கூறுகிறீர்கள். இதனை நாங்கள் நம்ப வேண்டுமா? இதற்கு பெயர்தார் ஆபரேஷன் சிந்துரா? ஆபரேஷன் சிந்தூரில் என்னவெல்லாம் நடந்தது? எவ்வளவு பேர் உயிரிழந்தனர்?

உங்களது விமானங்கள் சுடப்பட்டனவா, என்று எதிர்க்கட்சி தலைவர் கேட்டார். அப்படி ஒரு கேள்வியை நீங்கள் எப்படி கேட்கலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள்? மக்களவையில் பதில் அளித்த பாதுகாப்புத்துறை அமைச்சர் சொல்கிறார், ஒரு தேர்வு நடத்தப்பட்டால், அதன் முடிவு என்ன என்றுதான் பார்க்கவேண்டும், எத்தனை பென்சில்கள் உடைந்தன என்று பார்க்கக்கூடாது என்று. எவ்வளவு அருமையான எடுத்துக்காட்டு. ஒரு போரின்போது, இரண்டு பக்கமும் இழப்புகள் ஏற்படுவது இயல்பானது.

நாம் குறைவாக இழந்திருக்கலாம், அவர்கள் அதிகமாக இழந்திருக்கலாம். ஆனால் என்ன நடந்தது என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது. அரசு செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டபடி, காஷ்மீரில் பொதுமக்கள் 50 பேர் உயிரிழந்துள்ளனர். எவ்வளவு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று இந்நாட்டு மக்களுக்கு கூறுங்கள்.

**அமைச்சரே இவ்வாறு கூறலாமா?**

இதனை ஆபரேஷன் சிந்தூர், ஆபரேஷன் மகாதேவ் என்று எப்படி வேண்டுமானாலும் கூறிக்கொள்ளுங்கள். கலோனல் சோஃபியா குரேஷி என்ற அற்புதமான பெண்மணி எவ்வாறு குறிப்பிடப்படுகிறார்? பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் சகோதரி என்று அவரை தொடர்புபடுத்துகிறீர்கள். இதனை நீதிமன்றம் கூட கண்டித்தது. உங்கள் கட்சி கண்டித்ததா? இந்த நாட்டை வழிநடத்தும் உங்கள் பிரதமர் கண்டித்தாரா? இப்படி செய்யலாமா? இப்படி ஒரு கருத்தை கூறியவர் இன்னும் அமைச்சராக உள்ளார். நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அதை செய்யமுடியும்.

நம்முடைய பெண் மல்யுத்த வீராங்கனைகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் நாட்டின் பெருமிதம். உங்கள் கட்சி எம்.பி. பிரிஜ் பூஷனால் அவர்கள் மல்யுத்தம் செய்வதையே விட்டுவிட்டனர். நீங்கள் எப்போதாவது இதனை எதிர்த்துள்ளீர்களா? நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் அவைத்தலைவராக வீற்றிருக்கலாம். நீங்களே எல்லாமாகவும் இருக்கலாம். இதே பிரச்சினை முன்னரும் நாடாளுமன்றத்தில் எழுந்துள்ளது. ஒவ்வொரு அமர்விலும் அவை துணைத்தலைவர் கூறுகிறார், 2022ஆம் ஆண்டு அவைத்தலைவர் ஒரு விதியை அளித்துள்ளார் என்று.

இதே போன்று ராகுல் காந்தி பற்றி பேச்சு எழுந்தபோதும் நடந்தது. அவர் மற்றொரு அவையின் உறுப்பினர் அவரைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள் என்று நான் கேட்டேன், எதிர்க்கட்சித் தலைவரும் கேட்டார். அப்போது அவைத்தலைவர் வேறொரு விதியை அளித்தார். விண்ணுக்கு கீழ் இருப்பது அனைத்தும் அவையின் எல்லைக்குள் வரும், அனைத்தையும் அவையில் விவாதிக்கலாம் என்று கூறினார். அதுவே உங்கள் எண்ணமாக இருந்தால் விதி எண் 238 (1), (2), (3), (4), (5) ஆகியவற்றின் பலன் என்ன? என்று நான் கேட்ட போது எந்த பதிலும் இல்லை. விதி 238ஐ பொறுத்தவரை நான் அளிக்கவேண்டிய விதிமுறை காத்திருக்கிறது என்று அவர் கூறினார்.

**இழிவுபடுத்தியவர் பதவியில் தொடர்கிறார்!**

எனவே அவைத்தலைவர் அவர்களே, பெண் மல்யுத்த வீரர்களுக்கு அவமானம் விளைவித்த ஒரு நபரைக் குறிப்பிடுவது தவறு அல்ல. பலர் அந்த விளையாட்டிலிருந்து விலகிவிட்டனர். இதனால் நஷ்டம் ஏற்பட்டது நம் நாட்டிற்குத்தான். இதற்காக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட நாங்கள் கேட்கவில்லை. ஒரு அறம் சார்ந்த அணுகுமுறையுடன் அவரை கண்டித்தீர்களா?

மல்யுத்த வீராங்கனைகளையும் அவர்களது கோரிக்கைகளையும் புறக்கணித்தீர்கள். மற்றொரு பெருமைக்குரிய பெண்மணியான கலோனல் குரேஷியை அவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக தீவிரவாதிகளின் தங்கை என்று அழைக்கப்பட்டார். இதனை எதிர்த்து ஒரு வார்த்தை கூட, நீங்கள் கூறவில்லை. அந்தப் பெண்ணை இழிவுபடுத்திய அம்மனிதர் இன்னும் பதவியில் தொடர்கிறார் என்றால் அவரது நடவடிக்கையை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்றுதானே அர்த்தம்.

ஒவ்வொன்றிற்கும் மதவெறி சாயம் பூசாதீர்கள். நீங்கள் நினைத்தவற்றையெல்லாம் பேசாதீர்கள். பேசிவிட்டு உங்களுக்கே உரிய பாணியில் நியாயப்படுத்தாதீர்கள். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. சகிப்புத்தன்மை என்பது திறனற்று இருப்பதல்ல. அதன் பெயர் பொறுமை.

சிந்துநதி நீர் ஒப்பந்தம் குறித்து அரசு எடுத்த முடிவு சரியான முடிவு அல்ல. இதனை சக உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாமல் போகலாம். மற்ற நாடுகளில் நடப்பது போல், போர்க்காலங்களில் பொதுமக்களை பகடைக் காயாக் காதீர்கள்.

இரண்டாவதாக, ஒவ்வொருவரும் கேட்டது போல் , தயவு செய்து பதில் அளியுங்கள். டிரம்ப் ஏன் குறுக்கிட்டார்? இதற்கு முன்னரும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் நடந்துள்ளது. இரண்டு தலைவர்கள், மரியாதைக்குரிய லால் பகதூர் சாஸ்திரி அவர்களும் அயூப் கான் அவர்களும் சந்தித்து சமரசம் பேசினர். கார்கில் போர், பங்களாதேஷ் போர் என்று போர் குறித்து நமக்கு நீண்ட வரலாறு உண்டு.

**மறைந்தவர்களை குறை சொல்கிறீர்கள்!**

இந்தியாவிற்கு, அதன் சூழலுக்கும், இந்திய மக்களுக்கும், நீண்ட கால அரசியல் வாழ்விற்கும் ஏற்ற ஒரு வெளியுறவுக் கொள்கையை பண்டிதர் நேரு அவர்கள் அளித்துள்ளார். ஆனால் நீங்கள் அவரை குறைசொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் இறந்து 60 ஆண்டுகள் கடந்துவிட்டன. டாக்டர் மன்மோகன் சிங் பதவிக்காலம் முடிந்து 11 ஆண்டுகள் ஆகிவிட்டன. நேரு என்ன செய்தார்? டாக்டர் மன்மோகன் சிங் என்ன செய்தார்? என்று நீங்கள் இன்னும் குறைசொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

ஒரு நிகழ்வைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பராக் ஒபாமா அமெரிக்க அதிபராக பதவியேற்றபோது, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஆற்றிய முதல் உரையில் கூறினார், "நாடு மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ளது, நாட்டின் பொருளாதாரம் சிதைந்துவிட்டது. இதற்கு யார் காரணம் என்று குறை கூற நான் இங்கே வரவில்லை. இதனை யார் செய்தாலும் சரி, இப்போது இதற்கான பொறுப்பு என்னுடையது. எனவே இந்த மாண்பமை மன்றத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த அவையின் உறுப்பினர்கள் அவர்களது பாக்கெட்டிலிருந்து எடுக்கும் ஒவ்வொரு டாலரின் போதும் அந்தப் பணம் சரியான செலவிற்குத்தானா என்று தயவுசெய்து எண்ணிப்பாருங்கள். அதுதான் இதற்கான முடிவே தவிர, முந்தைய அரசை குறை சொல்வதல்ல". பராக் ஒபாமாவின் பெருந்தன்மையான உரை இது.

ஆனால் நீங்கள் இன்னமும் பண்டிதர் ஜவஹர்லால் நேருவையும் டாக்டர் மன்மோகன் சிங்கையும் குறைசொல்லிக்கொண்டுள்ளீர்கள். இருவருமே இப்போது உயிருடன் இல்லை. ஆனால் அவர்கள் அரசின் சாதனைகள் இன்னும் உள்ளன. ஐக்கிய முன்னணி கூட்டணியின் சாதனைகள் என்ன, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குறைபாடுகள் என்ன என்று ஒரு விவாதத்தை நீங்கள் துவங்கினால், விவாதிக்க நாங்கள் தயாராக உள்ளோம். நீங்கள் ஆளுங்கட்சியில் இருப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது என்பதற்காகவே நீங்கள் நினைத்தவற்றையெல்லாம் பேசலாம், யாரை வேண்டுமானாலும் குறைசொல்லலாம் என்று கிடையாது.

**கேள்விகளுக்கு பதில் தாருங்கள்!**

நேற்றைய தினம் கொல்லப்பட்டவர்கள் தீவிரவாதிகள்தான் என்பதற்கு ஆதாரம் அளியுங்கள். நாடாளுமன்றத்தைக் கூட்டவும் இந்த விவாதத்தை நடத்தவும் நீங்கள் ஏன் மூன்று மாதங்கள் காத்திருந்தீர்கள்? அவர்கள் இந்த மூன்று மாதங்களாக எங்கிருந்தார்கள்? இந்தியாவிற்குள் இருந்தார்களா? உள்துறை அமைச்சகத்திற்கு தெளிவாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர்கள் பாகிஸ்தானிற்குள் சென்றுவிடக்கூடாது என்பதில் அரசு தெளிவாக இருந்துள்ளது. அப்படியென்றால் அவர்கள் இங்குதான் இருந்துள்ளனர். ஆனால் அவர்களுக்கு பாகிஸ்தான் சாக்லெட்டுகள் கிடைத்துள்ளன. பாகிஸ்தானிய துப்பாக்கிகள் கிடைத்துள்ளன. இந்த எல்லா கேள்விகளுக்கும் நீங்கள் விடையளிக்க வேண்டும்.

நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். உங்களுடைய அரசுக்கு முன்னரைப் போல் அறுதி பெரும்பான்மை இருக்கிறது என்று நினைக்காதீர்கள். நீங்கள் இரண்டு ஊன்றுகோல்களுடன் நடந்து கொண்டிருக்கிறீர்கள். இதில் ஒரு ஊன்றுகோல் உடைந்தாலோ அல்லது நீக்கப்பட்டாலோ, நீங்கள் நொண்டிக்கொண்டு நடக்கவேண்டியிருக்கும். ஜனநாயகம் பாடங்களை புகட்டும். பெரிய கட்சியாக இருந்தவையெல்லாம் அடுத்த தேர்தல்களில் தோல்வியை சந்தித்துள்ளன. எங்கிருக்கிறோம் என்று தெரியாத கட்சி ஆட்சிக்கு வந்துள்ளது. நீங்கள் அதிகாரத்தில் உள்ளீர்கள். அரசியலில் உள்ள அடிப்படை கட்டமைப்பு என்னவென்றால் அதிகாரம் வரும்போது அதனுடன் நிறைய பொறுப்பும் வருகிறது. உங்களுடைய பொறுப்பு ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அதே சமயம், நீங்கள் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரித்து வருகிறீர்கள். நாடாளுமன்றமும் வளர்ந்து கொண்டிருக்கிறது. விகிதாச்சார அடிப்படையிலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. உங்கள் நடவடிக்கையை சற்று மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**நாட்டின் நலனில் அக்கறை உண்டு!**

நான் என்னவெல்லாம் பேசியிருக்கிறேனோ, எங்களது எதிர்க்கட்சித் தலைவர் என்னவெல்லாம் பேசியிருக்கிறாரோ அல்லது இனி என்னவெல்லாம் மற்றவர்கள் பேசவிருக்கிறார்களோ அவை அனைத்தும் நாட்டின் நலன் கருதியே.

நாட்டின் நலன் குறித்து எங்களுக்கும் அக்கறை உண்டு. நாங்கள் கடந்த காலத்தில் நல்லவை செய்துள்ளோம், இன்னும் செய்யவிருக்கிறோம். தற்போது நீங்கள் ஆட்சியில் உள்ளீர்கள். பதிலுடன் வாருங்கள். பணிவுடன் பதில் அளியுங்கள். நாடாளுமன்றத்தை மதிக்கவும். மக்களை மதிக்கவும், என்பதே எங்கள் பணிவான வேண்டுகோள். இதுபோல் இன்னொரு நிகழ்வு அப்பள்ளத்தாக்கில் நடக்க கூடாது. இந்தியா மிகவும் வலிமையானது. நம்மிடம் 40 இலட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். வலிமையான விமானப்படை உள்ளது. இருந்தும் உங்களால் மக்களை காக்க முடியவில்லை. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை திரும்பப் பெறுங்கள். ஆனால் நீங்கள் குறை சொல்லிக் கொண்டுதான் உள்ளீர்கள். இறந்து போன தலைவர்களையும் முந்தைய அரசாங்கங்களையும் குறை சொல்வதை நிறுத்துங்கள். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அது உங்களின் கடமை.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

## புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்

# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கார்த்திக் வி.ஆர்.தொண்டைமான் கழகத்தில் இணைந்தார்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



சென்னை, ஆக. 8 -

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (06.08.2025) காலை, புதுக்கோட்டை மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் புதுக்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவருமான கார்த்திக் வி.ஆர். தொண்டைமான் அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், கழக அயலக அணி மாநிலச் செயலாளர் எம்.எம். அப்துல்லா, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் பூச்சி முருகன் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

## கோட்டூர் தெற்கு ஒன்றியம்

# அறுபது இளைஞர்கள் குடும்பத்துடன் கழகத்தில் இணைந்தனர்!

## பூண்டி.கே.கலைவாணன் - வி.எஸ்.ஆர்.தேவதாஸ் முன்னிலை!

திருவாரூர், ஆக. 8 –

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு, திருவாரூர் மாவட்டம் கோட்டூர் தெற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த பெருகவாழ்ந்தான் பகுதியில் அறுபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர். தேவதாஸ் அவர்களின் முன்னெடுப்பில் , தங்களை மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில், எல்லோர்க்கும் எல்லாம் தடைகள் இன்றி கிடைக்கும் இந்த திமுக ஆட்சிதான் 2026 லும் தொடரவேண்டும் என்கிற உறுதியோடு, கோட்டூர் தெற்கு ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பல்வேறு இயக்கத்தில் இருந்து விலகி தங்களை ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஆர்.தேவதாஸ் ஒருங்கிணைப்பில், மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக இருவண்ண வேஷ்டிகள் கொடுத்து வாழ்த்தி வரவேற்றார்.

பின்னர் கழகத்தில் இணைந்த அறுபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொரடாச்சேரி மாவட்ட அலுவலகத்திலிருந்து, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் இருசக்கர வாகனத்தில் ஊர்வலமாகச் சென்று, திருவாரூரில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினர்.

நிகழ்வில் கோட்டூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், கொரடாச்சேரி பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியம், அசாவீரன்குடிகாடு ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் நடைபெறுவதை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் பார்வையிட்டு, முகாமில் வருமானச் சான்று வேண்டி விண்ணப்பித்த மாணாக்கர்களுக்கு உடனடியாக இணையவழி சான்றுகளையும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

## நாமக்கல்லில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமையில்

# முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள் - அமைதிப் பேரணி !

## நாமக்கல் மாநகரச் செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், செ.பூபதி, அ.சிவக்குமார் முன்னிலை!

நாமக்கல், ஆக. 8 -

தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராகவும், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும் விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்களின் நினைவை போற்றும் வகையில், நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து பரமத்தி சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலை வரை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமையில் அமைதி பேரணி சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், அவைத்தலைவர் மணிமாறன், நாமக்கல் மாநகர செயலாளர்கள் இராணா ஆர். ஆனந்த், துணை மேயர் செ.பூபதி, அ.சிவக்குமார், மாநகராட்சி மேயர் கலாநிதி, முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார். இளங்கோவன், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநகர உறுப்பினர்கள், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்களின் நினைவை போற்றும் வகையில் நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து பரமத்தி சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலை வரை நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் அமைதி பேரணி சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், அவைத்தலைவர் மணிமாறன், நாமக்கல் மாநகரச் செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், துணை மேயர் செ.பூபதி, அ.சிவக்குமார், மாநகராட்சி மேயர் கலாநிதி, முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார்.இளங்கோவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.